புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **12 பிப்ரவரி 2024**

# பத்திரிகை செய்தி

ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள சர்வதேச பொது சுகாதார கல்வி மையத்தில் பாரதப் பிரதமர் பாரதிய மக்கள் மருந்தகம் இன்று திறக்கப்பட்டது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் மக்கள் மருந்தகத்தைத் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால் மற்றும் மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மருந்தகத்தைத் திறந்து வைத்து துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- மக்கள் உடல் பிரச்சினை காரணமாக மருத்துவரை அணுகும்போது அவர் எழுதிக் கொடுக்கும் மாத்திரையை பண நெருக்கடியால் முழுவதும் வாங்காமல் குறைந்த அளவு வாங்கி உண்ணும் நிலை பலரிடம் இருக்கிறது. வீட்டுச் செலவுகளை கவனத்தில் கொண்டு பாதி மருந்து மட்டுமே பலர் வாங்குகிறார்கள்.
- குறிப்பாக ஓய்வூதியம் வாங்கும் முதியவர்களுக்கு பல்வேறு விதமான நோய்கள் இருக்கும். அதற்காக அவர்கள் மருந்து வாங்கவரும் சூழலில் தனது ஓய்வூதியத் தொகையில் பெரும்பங்கு அவர்கள் மருந்துகள் வாங்க செலவிட வேண்டி இருக்கும். அதன் காரணமாக அவர்களின் வாழ்நாள் குறைந்து கொண்டே போகும்.
- பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இந்தத் திட்டத்தின் மூலம் மேற்சொன்ன அனைத்து சிக்கல்களும் முடிந்து விட்டது. அதற்கு நாம் பாரதப் பிரதமருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஒரு மருந்து வெளியில் ரூ. 1200க்கு கிடைத்தால் இங்கே ரூ. 200 க்கு கிடைக்கிறது. சானிட்டரி நாப்கின் ஒன்று ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
- ஜிப்மர் போன்று மிகப்பெரும் மருத்துவமனை இங்கு இருப்பதற்கு நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். நமக்கு மிக அருகிலேயே மிக உயரிய சிகிச்சைகள் அளிக்கக்கூடிய இடமாக ஜிப்மர் மருத்துவமனை திகழ்கிறது. இந்தியாவில் சிறந்த மருத்துவமனையில் முதல் பத்து இடத்தில் நான்காவது இடத்தை ஜிப்மர் மருத்துவமனை இருக்கிறது. மருத்துவமனையில் சில சிக்கல்கள் இருப்பினும் மிக உயரிய சிகிச்சைகள் மக்களுக்கு கிடைக்கிறது. பல்வேறு உயரிய கல்விகள் படித்த மருத்துவர்கள் இங்கே மக்களுக்கு உதவுகிறார்கள். இதற்கு இந்த மருத்துவமனை சார்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வோம்.
- மக்கள் மருந்தகம் இங்கு இருக்க வேண்டும் என்கிற கோரிக்கையை ஜிப்மர் இயக்குனரிடம் முன்பு கூறினேன். நிர்வாக ரீதியாக இருந்த சில சிக்கல்களால் அது தாமதப்படுத்தப்பட்டாலும் மக்களின் நலனுக்கு இப்போது நடைமுறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.
- இந்தியாவில் 10,500 மக்கள் மருந்தகம் இயங்கி வருகிறது. ரூ 7,500 கோடி மக்கள் மருந்தகத்தின் மூலம் சேமிக்கப்பட்டு இருக்கிறது. புதுச்சேரி மக்களுக்கு மட்டுமல்லாது தமிழக மக்களுக்கும் அதிக அளவில் இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

- மருத்துவர்கள் எந்த மருந்து கொடுத்தாலும் அதை சரியாக சாப்பிட வேண்டும். மாத்திரைகளின் நிறம் குறித்து மக்கள் மனதில் தவறான கண்ணோட்டம் நிலவி வருகிறது. சில நேரங்களில் இலவசமாக கொடுக்கும் மருந்துகள் மீது சரியான பார்வை இருப்பது இல்லை.
- மருந்து சாப்பிடுவது மருத்துவரை பார்ப்பதை போலவே மிக அவசியமானது. மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே நீங்கள் மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்களாகவே மருந்தகத்தில் மருந்து வாங்கி எடுத்துக் கொள்ளக்கூடாது.
- அதைப்போல இங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிரித்த முகத்துடன் மக்களுக்கு மருந்துகளைக் கொடுக்க வேண்டும். சில நேரங்களில் நம் உடலில் ஏற்படும் சிக்கல்களுக்கு மருந்தாக நம் வீட்டு உணவு பொருட்களை உண்ணும் பழக்கம் இருக்கிறது. அவ்வாறு செய்யாமல் எத்தகைய சிறிய உடல் சிக்கல்களையும் உதாசீனப்படுத்தாமல் தக்க மருத்துவரை அணுகி கவனமாக இருக்க வேண்டும்.